**செய்தி வெளியீடு எண்: 918** **நாள்: 13.12.2018**

# சேலம் மாநகரில் இன்று (13.12.2018) நடைபெற்ற, பல்வேறு திட்டங்கள், சீர்மிகு நகரத் திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்றையதினம் சேலம் மாநகராட்சி புதுப்பொலிவு பெறுகின்ற விதமாக பல்வேறு திட்டங்கள், சீர்மிகு நகரத் திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா.

இன்றையதினம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னான தினம். இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே சேலம் மாவட்டம் என்று சொன்னாலே அம்மாவிற்கு தனி பிரியம் உண்டு. அதுவும் சேலம் மாநகராட்சி என்றால் ஒரு ராசியான இடம் என்று அம்மா எப்பொழுதும் நினைப்பார்கள். ஆகவே, இந்த ராசியான மாநகராட்சிக்கு என்னென்ன திட்டங்கள் வேண்டுமோ அத்தனை திட்டங்களையும் வாரி வழங்கிய முதலமைச்சர் மறைந்த இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள இந்த நேரத்திலே கடமைப்பட்டிருக்கின்றேன். அவருடைய காலத்தில் தான் நிறைய திட்டங்கள் நாங்கள் கொண்டு வந்தோம். திமுக–வினர் ஆனந்தா பாலத்தை பாதியிலே கட்டி விட்டுச் சென்றுவிட்டார்கள், அதையும் நாம் தான் கட்டி முடித்தோம், அதற்கு நில எடுப்பிற்குத் தேவையான நிதியையும் அம்மாதான் கொடுத்தார்கள்.

திருவாக்கவுண்டனூர், ஏரியா ரவுண்டானா, இரும்பாலை சந்திப்பு, சூரமங்கலம் இரயில்வே கீழ்ப்பாலம் போன்ற பாலகள் கட்டுவதற்கும் அம்மா தான் ஒப்புதல் செய்து, நிதி ஒதுக்கி, அம்மாவினுடைய நல்லாசியோடு கட்டி முடிக்கப்பட்டு, இன்றைக்கு

மக்களுடைய பயன்பாட்டிற்கு திறந்து வாகனங்கள் அருமையாக போய்க் கொண்டிருக்கிறது. 5 ரோடு சந்திப்பு ஈரடுக்கு மேம்பாலம், 4 ரோடு சந்திப்பில் ரூபாய் 320 கோடியில், அந்தப் பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, அவைகளும் விரைவாக நடைபெற்று முடிந்து, மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படும். ஏனென்றால், சேலம் மாநகரம் வளர்ந்து வருகின்ற ஒரு மாநகரம், போக்குவரத்து நெரிசல் அதிகமான மாநகரம். ஆகவே, இந்த மாநகரத்தில் போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைப்பதற்காக அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே அவரிடம் எடுத்துச் சொல்லி, பல்வேறு பாலங்கள் பெறுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம்.

அதேபோல, செவ்வாய்ப்பேட்டை லீ பஜார், ஒரு சிலர் நீதிமன்றத்திற்கு சென்ற காரணத்தினால், அது தடை பட்டுள்ளது, வழக்கு முடிந்தவுடன் அந்தப் பாலங்களும் மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும், விரைவாக திறக்கப்படும்.

அதேபோல, அருமைச் சகோதரர் வெங்கடாசலம் அவர்கள் கந்தம்பட்டி–சோழாபுரம் பாலம் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள், அதற்கும் ஒப்பந்தம் விடப்பட்டு பணிகள் தொடங்கப்படும். தேசிய நெடுஞ்சாலையில் எந்த இடத்திலும் போக்குவரத்து நெரிசல் இல்லாமல், எளிதாக கனரக வாகனங்கள், பேருந்துகள் செல்வதற்கு, இலகு வாகனங்கள் செல்வதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுத்து, தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் பல்வேறு பாலங்கள் கட்டப்பட்டு, இன்றைக்கு போக்குவரத்து சீர் செய்யப்பட்டிருக்கிறது. கந்தம்பட்டி–சோழாபுரம் பாலத்திற்கும் விரைவாக அடிக்கல் நாட்டப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, வீரபாண்டி சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரி மனோன்மணி அவர்கள் அரியானூர் பாலம் கட்ட வேண்டுமென்று தெரிவித்தார்கள், அதற்கு ஒப்பந்தம்

விடப்பட்டிருக்கிறது, கிட்டத்தட்ட இன்னும் 20 நாட்களில் அதற்கும் அடிக்கல் நாட்டு விழா இருக்கும்.

சங்ககிரி சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரர் ராஜா அவர்கள் மகுடஞ்சாவடியில் உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டுமென்று தெரிவித்தார்கள், அதற்கு ஒப்பந்தம் விடப்பட்டிருக்கிறது, அதற்கும் விரைவாக அடிக்கல் நாட்டப்படும். ஆகவே, இரண்டு பாலங்களுக்கும் விரைவாக அடிக்கல் நாட்டப்படும்.

ஆகவே, உயிர் சேதம் இல்லாமல், விபத்துக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு அம்மாவினுடைய அரசால் புதிய மேம்பாலங்கள் கட்டி திறக்கப்பட்டு வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், 8 வழிச் சாலை அமைப்பதற்கு விடமாட்டேன் என்கிறார்கள். வெளிநாடுகளில் அருமையான சாலைகள் உள்ளன. விபத்தைக் குறைக்க வேண்டும். மனித உயிர் விலை மதிக்க முடியாதது, எதை வேண்டுமானாலும் சம்பாதித்துக் கொள்ளலாம், உயிரை சம்பாதிக்க முடியாது, அந்த உயிர் காப்பாற்றப்பட வேண்டும், விபத்தில்லாத சாலை அமைக்கப்பட வேண்டும். பொருளாதார மேம்பாடு அடைய வேண்டுமென்று சொன்னால், புதிய, புதிய தொழிற்சாலைகள் வரவேண்டுமென்றால், உள்கட்டமைப்பு வசதிகள் மிகவும் முக்கியம். ஆகவே, 8 வழிச் சாலையை கொண்டு வருவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தோம். எல்லோரும் சேலத்திற்கு மட்டும் இந்தச் சாலையை போடுவதாக நினைக்கின்றார்கள், தவறு, சேலம் வழியாக நாமக்கல், கரூர், திண்டுக்கல், மதுரை என்று கன்னியாகுமரி வரை செல்கிறது, அதேபோல, ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், கொச்சின் வரை செல்கிறது. இதனால், சுமார் 70 கிலோமீட்டர் தூரம் குறைவாகிறது, அதனால், அதற்குரிய எரிபொருள் தேவை, பயண தூரம்

குறைகிறது. அதுமட்டுமல்ல, விபத்தில்லாமல் நாம் பார்த்துக் கொள்கிறோம் என்பது தான் மிக முக்கியம். சர்வதேச தரத்திற்கு இணையான சாலை போடுகிறோம், இதில் என்ன தப்பு? சில இடங்களில் இடம் எடுக்க வேண்டிய சூழ்நிலையில், அந்த மக்களுக்குத் தேவையான இழப்பீடு வழங்குகிறோம், சிறப்பு இழப்பீடாக வழங்குகின்றோம், யாருக்கும் நஷ்டம் ஏற்படாது. ஒரு ஏக்கருக்குக் கீழ் இருந்தால் அவர்களுக்கு இழப்பீடு கொடுத்த பிறகு, அவர்களுக்குத் தேவையான வீடு கட்டுவதற்கு இடவசதி கொடுத்து, வீடும் கட்டிக் கொடுக்கின்றோம், இவ்வளவு வசதியும் செய்து தருகின்றோம். எனவே, ஒரு நகரம் வளர வேண்டுமென்று சொன்னால், மாநிலம் வளர்ச்சி பெற வேண்டுமென்று சொன்னால் உள்கட்டமைப்பு மிக முக்கியம்.

இன்றைக்கு, இந்த தேசிய நெடுஞ்சாலை, தருமபுரியிலிருந்து கோயம்புத்தூர் செல்வதற்கு உருவாகும்பொழுது, கடுமையான போக்குவரத்து குறைந்தது. நாளுக்கு நாள் போக்குவரத்து அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் வாகனங்களின் எண்ணிக்கை, கிட்டத்தட்ட 180 மடங்கு அதிகரித்துள்ளது. ஏற்கனவே அந்தத் திட்டங்களை செயல்படுத்தியதன் காரணமாக, ஓரளவு நாம் வாகன நெருக்கடி இல்லாமல் செல்கிறோம். இன்னும் இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு கிட்டத்தட்ட 5 ஆண்டு காலமாகும். ஒவ்வொரு ஆண்டும் 17 இலட்சம் வாகனங்கள் தமிழ்நாட்டில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. 5 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 100 சதவீதம் வந்துவிடும். எனவே, 280 சதவீதமானல் எப்படி சாலைகளில் செல்ல முடியும்?

ஆகவே, விபத்துக்களை தவிர்ப்பதற்கு அம்மாவினுடைய அரசு 8–வழிச் சாலையை மேற்கொள்வதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. பல்வேறு அமைப்புகள் தடை செய்து கொண்டிருக்கின்றன, இருந்தாலும், இந்த நாட்டினுடைய நலன் கருதி,

அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியின் வாயிலாக முடிவுற்ற பணிகளில் இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன. நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் சேலம் மாநகராட்சியில் Smart City-க்கு ரூபாய் 4கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பரவலாக்கப்பட்ட 5 நுண்உயிரி உரம் தயாரிக்கும் வணிகக் கட்டடம் இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதேபோல, ரூபாய் 12 லட்சம் மதிப்பீட்டில் Smart மரங்களும், ரூபாய் 28 லட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டில் கோட்டை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ரூபாய் 39 லட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் குடிமியான் தெரு மாநகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடம் இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஆகமொத்தம் ரூபாய் 5 கோடியே 10 லட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற 4 பணிகள் இன்றைக்கு திறக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்கியிருக்கிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்கள் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் Smart City-ன் கீழ் ரூபாய் 92 கோடியே 13 லட்சம் மதிப்பீட்டில் பழைய பேருந்து நிலையத்தை ஈரடுக்கு பேருந்து நிலையமாக மாற்றியமைக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ரூபாய் 20 கோடியே 58 லட்சம் மதிப்பீட்டில் எருமாபாளையம் திடக்கழிவு கிடங்கினை நவீன விஞ்ஞான முறையில் சுகாதாரமான பசுமைத் தளமாக மாற்றியமைக்கின்ற பணிக்கு அடிக்கல் நாட்டு விழா, ரூபாய் 18 கோடியே 8 லட்சம் மதிப்பீட்டில் திருமணிமுத்தாற்றின் கரைகளை மேம்படுத்துகின்ற திட்டப் பணிகள்,

ரூபாய் 13 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் ஆனந்தா பாலம் அருகில் அடுக்குமாடி வாகன நிறுத்தம் அமைக்கும் பணி, ரூபாய் 7 கோடியே 80 லட்சம் மதிப்பீட்டில் விக்டோரியா வணிக வளாகம் பகுதியில் அடுக்குமாடி வாகன நிறுத்தம் அமைக்கும் பணி, ரூபாய் 5 கோடியே 90 லட்சம் மதிப்பீட்டில், பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் மத்திய பேருந்து நிலையத்திற்கான பணிகள், ரூபாய் 4 கோடியே 75 லட்சம் மதிப்பீட்டில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் 6 பரவலாக்கப்பட்ட நுண்உயிரி உரம் தயாரிக்கும் மையக் கட்டடம் அமைக்கும் பணி, ரூபாய் 3 கோடியே 72 லட்சம் மதிப்பீட்டில் Smart சாலைகள் அமைய இருக்கும் சாலைகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தும் பணி என மொத்தம் ரூபாய் 166 கோடியே 52 லட்சம் மதிப்பீட்டில் 8 புதிய திட்டப் பணிகள் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு புதிய திட்டப் பணிகள் இந்த Smart City–திட்டத்தின் கீழ் 26 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் 110 பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் தனி குடிநீர்த் திட்டம் நிறைவுற்ற பணிகளில் சாலைகள் மறுசீரமைக்கும் பணிகள், ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை குழாய்களில் அடைப்புகளை சரிசெய்திடும் வாகனம், ரூபாய் 53 லட்சம் மதிப்பீட்டில் தொழில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ள 2 ஜேசிபி வாகனம் என மொத்தம் 27 கோடியே 23 லட்சம் மதிப்பீட்டிலான 3 பணிகள் இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. மாநகராட்சியின் சார்பாக 2190 சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டைகளும், 56 நபர்களுக்கு கருணை அடிப்படையில் வாரிசுகள் பணி நியமன ஆணைகள், மாற்றுத் திறனாளிகள்

துறையின் சார்பில், மாண்புமிகு முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 30 மாற்றுத் திறனாளிகளுக்கு அதிநவீன செயற்கை அவயங்கள் மூளை முடக்குவாத நோயால் பாதிக்கப்பட்ட 10 குழந்தைகளுக்கு ரோலேட்டர் எனப்படும் நடைபயிற்சி உபகரணங்களும், 10 மாற்றுத் திறனாளிகளுக்கு வைப்புநிதி வங்கிக் கடன் மானியம் மற்றும் ஆவின் விற்பனை நிலையம் அமைப்பதற்கான ஆணைகளும், மனவளர்ச்சி குன்றிய 10 மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவு ஆணைகளும், 75 சதவீதத்திற்கு மேல் கை, கால் பாதிக்கப்பட்ட 255 மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவு ஆணைகளும், தொழுநோயால் பாதிக்கப்பட்ட 5 மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவு ஆணைகளும், 10 மாற்றுத் திறனாளிகளுக்கு கல்வி உதவித் தொகையும், 5 மாற்றுத் திறனாளிகளுக்கு சுயதொழில் செய்வதற்கான வங்கிக் கடன் மற்றும் மானியமும், கல்வி நிலையம் செல்வோர், பணிக்கு செல்வோர், சுயதொழில் புரிவோர் என 40 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்திய விலையில்லா பெட்ரோல் ஸ்கூட்டர்களும், 40 மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்களும், 20 மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகளும், 30 மாற்றுத் திறனாளிகளுக்கு ஊன்றுகோல்களும், 10 மாற்றுத் திறனாளிகளுக்கு காதொலி கருவிகளும், 25 மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரமும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 176 வயது முதிர்ந்தோர்களுக்கு உதவி உபகரணங்களும், என மொத்தம் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் சார்பில், 576 பயனாளிகளுக்கு ரூபாய் 92 லட்சத்து 91 ஆயிரத்து 600 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் இந்த நிகழ்ச்சியின்

வாயிலாக மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருவாய்த் துறையின் சார்பில் 52 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவு ஆணைகளும், 40 நபர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாவும், 11 நபர்களுக்கு கல்வி உதவித் தொகையும், 27 நபர்களுக்கு விதவை உதவித் தொகையும், 2 நபர்களுக்கு கணவரால் கைவிடப்பட்டவருக்கான உதவித் தொகையும், 11 நபர்களுக்கு மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவு ஆணைகளும் என வருவாய்த் துறையின் சார்பில் 145 நபர்களுக்கு ரூபாய் 5 லட்சத்து 45 ஆயிரத்து 600 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், ஊரக வளர்ச்சித் துறையின் மகளிர் திட்டத்தின் சார்பில் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் திட்டத்தின் கிழ் 100 மகளிருக்கு ரூபாய் 25 லட்சத்திற்கு மானியத் தொகையும், சமூக நலத் துறையின் சார்பில், 4 மகளிருக்கு ரூபாய் 3 லட்சம் என பல்வேறு திட்டங்கள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்பட்டிருக்கின்றது என்ற நல்ல செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மறைந்த பிறகு, அம்மா வழியிலே இன்றைக்கு அம்மாவின் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள், அனைத்துத் தர மக்களுக்கும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் அமைப்பான உள்ளாட்சி அமைப்பு. தமிழகம் முழுவதும் இன்று உள்ளாட்சி அமைப்பு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சருடைய செயல்பாடுதான் காரணம், எனக்கு உறுதுணையாக அவர் விளங்கிக் கொண்டிருக்கின்றார், அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல, நமது சட்டப் பேரவை உறுப்பினர்கள்,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். என்னோடு இணைந்து பணியாற்றுகின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் சிறப்பான முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள், நான் முழு அதிகாரம் கொடுத்திருக்கிறேன், எல்லா துறைகளும் இன்றைக்கு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றன.

கஜா புயலால் பல மாவட்ட மக்களின் வாழ்வாதாரம் அழிந்து விட்டது. அங்கு இருக்கின்ற தென்னை மரம், தேக்கு மரம், சவுக்கு மரம், வெற்றிலைக்கொடி, மற்றும் பல மரங்கள், நெற்பயிர்கள் அழிந்து, விவசாயிகளின் வாழ்வாதாரம் இழந்து அவர்கள் நிற்கின்றார்கள். உண்மையிலேயே மனம் வேதனைப்படுகின்றது. அவர்கள் வாழ்வை புனரமைப்பதற்காக அம்மாவின் அரசால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, தேவையான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆட்சியில் எதுவும் கிடைக்கவில்லை, இன்னும் விரைந்து நடக்க வேண்டும் என்று வேண்டுமென்றே ஒருசில எதிர்க்கட்சிகள் தவறான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு புயலால் 2,21,000 மின்கம்பங்கள் சாய்ந்துவிட்டன. 21 ஆயிரம் மின்சார ஊழியர்கள் அங்கேயே முகாமிட்டு, இரவு, பகல் பாராமல், மழையை பொருட்படுத்தாமல், மக்களுக்கு மின்சார இணைப்பு கொடுப்பதற்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 75 சதவீதப் பணிகள் இன்றைக்கு நிறைவு பெற்றிருக்கின்றன, மீதம் 25 சதவீத பணிகள் தான் இருக்கும், அவைகளும் வேகமாக முடிக்கப்பட்டுவிடும். டெல்டா பாசனப் பகுதிகள் வயல்கள் நிறைந்த பகுதிகளாதலால், மின்கம்பங்கள் நடுவது மிகவும் கடினமான பணி, சொல்வது சுலபம், செயல்படுவது கடினம். உயிரைப் பணயம் வைத்து நம்முடைய மின்சார ஊழியர்கள் அந்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதேபோல, உள்ளாட்சி துப்புரவுப் பணியாளர்கள் சுமார் **2400** நபர்கள், பேரூராட்சி, நகராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள குப்பைகளை எல்லாம் அகற்றி, தூய்மைப்படுத்தி பழைய நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். உள்ளாட்சி துப்புரவுப் பணியாளர்களும், அதற்காகப் பாடுபட்ட உள்ளாட்சியைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த, உளமார்ந்த பாராட்டுகளை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, வருவாய்த் துறை அதிகாரிகள் மிகச் சிறப்பாக செயல்பட்டிருக்கிறார்கள். வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை, மீன்வளத் துறை அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து, ஆறுதல் சொல்லி, அவர்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை, வேகமாக, துரிதமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒட்டுமொத்த அரசு இயந்திரத்தில் இருக்கின்ற அத்தனை அரசு ஊழியர்களையும் சிறப்பான முறையிலே பணியாற்றுகின்றார்கள். கஜா புயல் எந்த வேகத்தில் வந்ததோ, அதே வேகத்தில், தங்களுடைய பணிகளைக் கொண்டு சீர் செய்கின்ற உள்ளம் படைத்த, நல்ல, நேர்மையான, திறமையான, அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றிய அந்த நல்ல உள்ளங்களுக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கின்றேன்.

அதேபோல, Bus-port, நான் ஏற்கனவே கூறியதுபோல், மத்திய அரசு அதிகாரிகள் எல்லாம் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். எனவே, சேலம் மாநகரில் நவீன பேருந்து நிலையம் உருவாக்கப்படும். அதோடு, நமக்கு வரவிருக்கின்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். Role Model

City–யாக இந்த சேலம் மாநகரம் திகழும் என்பதை மனமாற, உளமாற இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, அம்மா அவர்கள் தந்த தனிக்குடிநீர் திட்டம், அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய அரசு அந்தத் திட்டத்தை விரைவுபடுத்தி, அந்தப் பணியை நிறைவு செய்கின்ற பாக்கியம் அம்மா அவர்கள் அரசிற்குத் தான் கிடைத்திருக்கின்றது. சேலம் மாநகர மக்களுக்குத் தேவையான குடிநீரை அம்மாவினுடைய அரசு வழங்கி வருகிறது.

அதேபோல, இடி, மின்னல் வருகின்ற காலங்களில் அடிக்கடி ஏற்படும் மின்தடையினை போக்குவதற்கு பூமிக்கு அடியில் கேபிள் பதிக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பாதாளச் சாக்கடைப் பணி, கடந்த ஆட்சியில் பாதியிலே விட்டுவிட்டுச் செல்லப்பட்டது, அதனை, அம்மாவினுடைய அரசு எடுத்து, விரைவுபடுத்தி, வேகப்படுத்தி செயலாக்கிக் கொண்டிருக்கிறது.

2011–க்கு முன்பு சேலம் மாநகரம் எப்படி இருந்தது, 2011–க்குப் பிறகு அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றதற்குப் பிறகு, அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகு, அம்மா அவர்கள் அரசு எந்தளவிற்கு சேலம் மாநகர மக்களுக்கு திட்டங்களைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சேலம் மாநகர மக்களின் வளர்ச்சிக்காக அடிப்படைத் தேவைகள் முழுமையாக நிறைவேற்றுகின்ற விதமாக அம்மாவினுடைய அரசால் அனைத்துத் திட்டங்களும் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சிகள் எதையுமே செய்யவில்லையென்று சொல்கிறார்கள், இவற்றையெல்லாம் பார்த்து தெரிந்துகொண்டு, இவ்வளவு திட்டங்களை நாங்கள் செயலாற்றிக் கொண்டிருக்கின்றோம், இவ்வளவு பாலத் தூண்கள் காட்சியளிக்கின்றன, இத்தனைத் தூண்களும் மேம்பாலப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்கு அவர்களுக்கு சான்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி,

மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த விழா நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அழைத்தவுடனே, நம்முடைய அழைப்பை ஏற்று, இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்றார்கள். ஆகவே, அவருக்கு உங்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்து நம்முடைய சேலம் மாநகரம் வளர்ந்து வருகின்ற மாநகரம், அந்த மாநகர மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து தருவதற்கு அம்மாவினுடைய அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**